[13th August 1963

திரு. எம். எஸ். மணி : தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிர்வாகம் கொடுக்க மறுத்து, லேபர் கமிஷனர் விசாரணைக்கு நிர்வாகம் வர மறுத்த காரணத்தினால்தான் கடைசியாக அந்தத் தொழிற்சங்கத் தலைவர் உண்ணாவிரதம் இருந்தார் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது முற்றிலும் தவறு. காரணம் என்னவாகயிருந்தாலும் தொழிலாளர் தலைவர் உண்ணாவிரதம் இருப்பது முற்றிலும் தவறு.

திரு. முனு ஆதி : தாலுகா மாஜிஸ்ட்ரேட் அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு சுட வேண்டுமென்று உத்தரவிட்டார்களா ? அல்லது டெப்டி சூப்பரின்டென்டென்ட் தன் அதிகாரத்தை வைத்துச் சுட முற்பட்டாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றித் தனி கேள்வி வேண்டும்.

திரு. க. ர. நல்லசிவம் : அந்தப் பிராந்தியத்தைப் பொறுத்தவரை பெருவாரியான பேர்கள் தினசரி கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் கைது செய்யவேண்டியவர்கள் ஜாபிதாவை போலீஸ் வெளியிட்டால் அவரவர்களே ஆஜராக வசதியாயிருக்கும். தான்தோன்றித்தனமாகக் கைது செய்வது தடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குற்றம் செய்தவர்களாக கருதப்படுபவர்கள் கைது செய்யப்படுவது தவிர்க்க முடியாதது.

புதிய கண்மாய் திட்டம் (மதுரை மாவட்டம்).

* 116 கேள்வி.—திருமதி ஏ. கிருஷ்ணவேணி : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டாரம் மாவூற்று ஓடை—லட்சிபுரம் புதிய கண்மாய் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : திட்டம் கைவிடப்பட்டது.

The proposal has been dropped.

MR. SPEAKER : Question No. 117 is postponed.

Government Royapettah Hospital, Madras.

* 118. *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the present stage of the construction of a 500 bed block in the Government Royapettah Hospital, Madras?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இவ் விஷயத்தை அரசாங்கம் யோசித்து வருகிறது.

13th August 1963]

திரு. கே. ஏ. மதியழகன் : தென் சென்னையின் அவசியத்தைக் கருதி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாவது இராயப் பேட்டை ஆஸ்பத்திரியை விருத்தி செய்கின்ற இவ்விஷயத்தில் நம் சர்க்கார் வற்புறுத்துமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது ஏற்கெனவே அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

பயிர்ப் பாதுகாப்பு, கால்நடை இன்சூரன்ஸ் திட்டங்கள்.

* 119 **கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு, கால்நடை இன்சூரன்ஸ் முதலிய திட்டங்களை நம் சர்க்கார் சீக்கிரத்தில் கொண்டுவர ஏற் பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தேசிய நெருக்கடியை உத்தேசித்தும், செலவில் சிக்கனம் செய்ய வேண்டிய அவசியத்தை முன்னிட்டும், இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவினர் ஆலோசனைப்படி கால் நடை இன்சூரன்ஸ் திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இம் மாநிலத்தில் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத் தைக் கொண்டுவரும் உத்தேசம் இல்லை.

In view of the National Emergency and the present need for economy in expenditure, the proposal for introducing Cattle Insurance Scheme in the State has been deferred as advised by the Government of India in the Indian Council of Agricultural Research.

There is no proposal to introduce a Crop Insurance Scheme in this State.

திரு. கே. ஏ. மதியழகன் : பல ஆண்டுகளாக எல்லாக் கட்சி களாலும் கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டம், பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் இவை கொண்டுவரப்பட வேண்டுமென்று இம்மன்றத்தில் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதனால் நன்மை அளிக்கிற இத்திட்டத்தை துரிதப்படுத்த சர்க்கார் முன் வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : கால்நடையைப் பொறுத்தவரை இத் திட்டத்தைக் கொண்டுவர இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. தேசிய நெருக்கடி காரணமாக இது ஒத்தி வைக்கப்பட்டது. அது பின்னால் எடுத்துக் கொள்ளப்படும். பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பொறுத்தவரை சிரமம் இருப்பதால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. வை. சங்கரன் : பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று இங்கு ஒரு சில ஆண்டுகளாக வற் புறுத்தப்பட்டு வருகிறது. அடிக்கடி பருவ மழை தவறி விடுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவதால் இது ஒரு நல்ல ஸ்கீம் என்ற முறையில் இதை எடுத்துக் கொள்ள சர்க்கார் உத்தேசிக்குமா ?